DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness PW-1

2019 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் தேதியன்று அரசு சாட்சி ஆக விசாரிக்கப்படுவர். 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6 (2) பிரிவுகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - | ஜெய்நிவாசன் | வயது |
| தந்தை பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது HCL நிறுவனத்தில் கோயம்புத்தூர் கிளையில் கணக்கு மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2005-2008 கல்வியாண்டுகளில் சென்னை எக்மோர் ரயில்வே குவார்ட்டர்சில் எனது பெற்றோருடன் வசித்துக்கொண்டு, வேளச்சேரி, குருநானக் கல்லூரியில் BCA படித்து வந்தேன். அப்போது அந்த கல்லூரியில் படித்த, இவ்வழக்கின் 23 வது எதிரி மோகன்பாபு என்பவர் எனக்கு நண்பரானார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் மூலமாக இவ்வழக்கின் 20 வது எதிரி ஸ்ரீதர்ராஜா என்பவர் எனக்கு அறிமுகம் ஆனார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். 2008 ம் ஆண்டு எனது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு 2009, 2010 ம் ஆண்டுகளில் நான் காபிடே என்ற நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணிபுரிந்தேன். அந்த 2

ஆண்டுகளில் நானும், எதிரி மோகன்பாபுவும் அவ்வப்போது தொலைபேசி வழியாக பேசிக்கொள்வோம். அந்தவகையில் 2010 ம் ஆண்டு ஒரு நாள் எதிரி மோகன்பாபு தொலைபேசி வழியாக என்னை அழைத்து, எதிரி ஸ்ரீதர்ராஜ் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனின் தேர்வு எழுத இருப்பதாகவும், அது பற்றி என்னிடம் பேச வேண்டும் எனவும், எதிரி மோகன்பாபு என்னிடம் கூறினார். அதன்பின்னிட்டு நானும், எதிரி மோகன்பாபுவும், எதிரி ஸ்ரீதர்ராஜை பார்க்கவேண்டி ஆலந்தூர் சென்றோம். அங்கு எதிரி ஸ்ரீதர்ராஜை, நானும், எதிரி மோகன்பாபுவும் சந்தித்து பேசினோம். அப்போது எதிரி ஸ்ரீதர்ராஜ், தான் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனின் குரூப்2 தேர்வு அந்த ஆண்டு எழுதப்போவதாகவும், அதற்காக வேண்டி ரூ.1,00,000/-யை அவருக்கு தெரிந்த ஒரு நபரிடம் முன்தொகையாகவும், அத்துடன் அவரது 10 ம் வகுப்பு, 12 ம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பிற்கான அசல் கல்வி சான்றிதழ்கள் ஆகியவற்றை கொடுத்து உள்ளதாகவும், அதற்காக அவர் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனின் அந்த ஆண்டு நடைபெறும் குரூப் 2 தேர்விற்கான வினாத்தாள் மற்றும் விடைகள் ஆகியவற்றை தேர்வுக்கு 1 வாரத்திற்கு முன்பே எதிரி ஸ்ரீதர்ராஜுக்கு அந்த நபர் கொடுத்துவிடுவார் என்றும், தேர்வு முடிந்து தேர்வு வினாவிற்கான விடைகள் சரிபார்க்கப்பட்ட பிறகு மீதி தொகையாக ரூ.4,00,000/-யை மேற்படி எதிரி ஸ்ரீதர்ராஜ் அந்த நபருக்கு கொடுக்கவேண்டும் என்றும், அவர்களுக்குள் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டதாகவும், அதன்படிதான் தான் செயல்படப் போவதாகவும் எதிரி ஸ்ரீதர்ராஜ் என்னிடத்தில் கூறினார். அதனை நானும், எதிரி மோகன்பாபுவும் பெரிதாக நம்பவில்லை. இது ஏதாவது பணம் கொடுத்து ஏமாற்றம் செய்யப்படும் வேலையாக இருக்கமோ என்று நான் எதிரி

மோகன்பாபுவிடம் கூறினேன். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜ், மேற்படி செயல்பாடுகளில் நம்பிக்கையில்லை என்றால், "தேர்வுக்குரிய 200 வினாக்களில் 5 வினாக்களை மட்டும் ஒரு மாதிரிக்காக உனக்கு சொல்கிறேன். தேர்வு முடிந்த பிறகு அந்த வினாத்தாளை நான் உன்னிடம் கொடுக்கிறேன். அதில் பார்த்தால் நான் கூறிய 5 வினாக்கள் இருக்கும். அப்போது உனக்கு நம்பிக்கை பிறக்கும்" என எங்களிடத்தில் கூறினார். அப்போதும் நான் எப்படி பார்த்தாலும் எதிரி ஸ்ரீதர்ராஜ் கூறும் சங்கதி நம்பும்படியாக இல்லை என்று நான் எதிரி மோகன்பாபுவிடம் கூறினேன். இறுதியாக எதிரி ஸ்ரீதர்ராஜ், ரிசல்ட் வந்தபிறகு உங்களுக்கு உண்மையான விசயம் புரியும் என்று கூறினார். அத்துடன் அந்த சந்திப்பு முடிந்து விட்டது. அதே ஆண்டு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசன் மூலம் கிராம நிர்வாக அதிகாரி பணிக்கான தேர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. நான் அந்த பணிக்கான தேர்விற்கு விண்ணப்பித்துவிட்டு, சென்னை தி.நகர், ரயில்நிலையம் பின்புறம் உள்ள நேதாஜி பயிற்சி நிறுவனத்தில் வாரத்தில் சனி, ஞாயிறு மட்டும் எடுக்கப்படும் முழுநேர பயிற்சி வகுப்பில் நான் சேர்ந்து படித்து பயிற்சி எடுத்துக்கொண்டு, தேர்விற்கு தயாராகி கொண்டிருந்தேன். அந்த பயிற்சி நிறுவனத்தில் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 24 வது எதிரி சதீஸ்குமார் எனக்கு அறிமுகம் ஆனார். அப்போதும் எதிரி ஸ்ரீதர்ராஜ் என்னிடத்தில் தொலைபேசி வழியாக அழைத்துப்பேசினார். பிறகு என்னைப்பார்ப்பதற்காக வேண்டி நான் பயின்று கொண்டிருக்கும் பயிற்சி நிறுவனத்திற்கு வந்தார். அப்போது நான், எனது நண்பரான 24 வது எதிரி சதீஸ்குமாரை, எதிரி ஸ்ரீதர்ராஜுக்கு அறிமுகப்படுத்தினேன். அப்போதும் எதிரி ஸ்ரீதர்ராஜ், என்னிடமும், எதிரி

சதீஸ்குமாரிடமும் என்னிடம் கூறியதுபோலவே மேற்படி கிராம நிர்வாக அதிகாரிக்கான தேர்வில், தேர்விற்கு முன்பே தேர்வு வினா மற்றும் விடைகளை பெற்றுத் தருவதாகவும், அதற்காக வேண்டி அவருக்கு தெரிந்த ஒரு நபரிடம் ரூ.1,00,000/-யை முன்தொகையாக கொடுத்தும், அத்துடன் 10 ம் வகுப்பு, 12 ம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பிற்கான அசல் கல்வி சான்றிதழ்கள் ஆகியவற்றை கொடுக்கவேண்டும் என்றும், அதற்காக அவர் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனின் அந்த ஆண்டு நடைபெறும் கிராம நிர்வாக அதிகாரிக்கான தேர்வின் வினாத்தாள் மற்றும் விடைகள் ஆகியவற்றை தேர்வுக்கு 1 வாரத்திற்கு முன்பே எதிரி ஸ்ரீதர்ராஜுக்கு அந்த நபர் கொடுத்துவிடுவார் என்றும், தேர்வு முடிந்து தேர்வு வினாவிற்கான விடைகள் சரிபார்க்கப்பட்ட பிறகு மீதி தொகையாக ரூ.4,00,000/-யை மேற்படி அந்த நபருக்கு கொடுக்கவேண்டும் என்றும், அந்த உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டால் தேர்வில் வெற்றிபெற முடியும் என்றும் எதிரி ஸ்ரீதர்ராஜ் கூறினார். மேலும் எதிரி ஸ்ரீதர்ராஜ் திநகரில் உள்ள அப்பல்லோ பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து படிக்கவேண்டும் என்றும், அங்கிருந்துதான் அவருக்கு தேர்விற்கு முன்பு வினா, விடைகள் கிடைக்கும் வழிவகைக்கான நபர்களுடன் தொடர்பு ஏற்பட்டதாகவும், மேலும் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனில் அவர் எழுதியிருந்த குரூப் 2 தேர்வில் அவர் தேர்ச்சி பெற்றுவிட்டதாகவும், அதற்கான முடிவுகள் வெளியிடப்பட்டுவிட்டதாகவும் கூறினார். மேலும் என்னையும், எதிரி மோன்பாபு மற்றும் சதீஸ்குமாரையும், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசன் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, அவர் குரூப் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான ஆதாரத்தை எங்களிடத்தில் காட்டினார். மேலும் அந்த தேர்வில் தேர்ச்சி பெற்றதற்காக வேண்டி நேர்காணலுக்கு தான்

அழைக்கப்பட்டிருப்பதாகவும், அதில் கலந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார். அவர் கூறிய அனைத்து சூழ்நிலைகளும், அவர் எங்களிடத்தில் சொன்ன சங்கதிகளை உறுதிப்படுத்தும் வகையிலும், எங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது. மேலும் எதிரி ஸ்ரீதர்ராஜ், எனக்கும், எதிரி மோகன்பாபு மற்றும் சதீஸ்குமாருக்கும், 2012 ம் ஆண்டு மே மாதம் வரப்போகவிருக்கும் குரூப்4 தேர்வில் அவர் பின்பற்றிய நடைமுறைகளை பின்பற்றி தேர்விற்கு முன்பே வினாத்தாள் மற்றும் விடைகளை எங்களுக்கு பெற்றுத் தந்து உதவுவதாக எங்களிடம் கூறினார். அதே போல் 2012 ம் ஆண்டு மே மாதம் குரூப் 4 தேர்விற்கான தேர்வு அறிவிப்பு வந்தது. நானும், எதிரி மோகன்பாபு மற்றும் சதீஸ்குமார் ஆகியோரும் தேர்விற்கு விண்ணப்பித்துவிட்டு, அது குறித்து எதிரி ஸ்ரீதர்ராஜிடம் கூறிவிட்டோம். அதற்காக வேண்டி எதிரி ஸ்ரீதர்ராஜ், என்னிடமும், எதிரி மோகன்பாபுவிடமும் தலா ரூ.1,00,000/-மும், எதிரி சதீஸ்குமாரிடம் ரூ.2,00,000/-மும் முன்தொகையாக பெற்றுக்கொண்டும், மேலும் என்னிடமும், எதிரி மோகன்பாபுவிடமும் 10 ம் வகுப்பு , 12 ம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பிற்கான கல்விச்சான்றை பெற்றுக்கொண்டும், எதிரி சதீஸ்குமாரிடம் அவர் 10 ம் வகுப்பு மற்றும் படித்திருந்ததால் 10 ம் வகுப்பிற்கான கல்விச்சான்றை மட்டும் பெற்றுக்கொண்டும், நான் சொல்லும் தேதியில் நீங்கள் 3 பேரும் தயாராக இருங்கள், நான் வந்து அழைத்துச் செல்கிறேன் என்று கூறிவிட்டு, மேற்படி முன்பணத்தொகை மற்றும் கல்விச்சான்றுகளை எதிரி ஸ்ரீதர்ராஜ் தனக்கு தெரிந்த கோயம்பேட்டில் உள்ள ஒரு நபரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார். அந்த சம்பவம் 2012 ஜுலை மாதம்

நடைபெற்றது. தேதி ஞாபகம் இல்லை. அதன் பின்னிட்டு அதே வரும் ஜுலை 4 ம் தேதி எதிரி ஸ்ரீதர்ராஜ், என்னையும், எதிரி மோகன்பாபு மற்றும் சதீஸ்குமார் ஆகியோரை பெங்களூருக்கு அவரது ஸ்விப்ட் காரில் அழைத்துச் சென்றார். அன்று மாலை நாங்கள் அனைவரும் பெங்களூரை அடைந்த ஒரு லாட்ஜில் தங்கிக்கொண்டோம். நாளை அனைவரும் வெளியில் கிளம்பிவேண்டும் என்பதால் அனைவரும் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதேபோல் மறுநாள், அதாவது 2012 ம் ஆண்டு ஜுலை 5 ம் தேதி காலை 10 மணிக்கு லாட்ஜிலிருந்து நாங்கள் 4 பேரும் அதே காரில் சென்றோம். எங்கே செல்கிறோம் என எதிரி ஸ்ரீதர்ராஜ் எங்களிடம் கூறவில்லை. ஒரு குறிப்பிட்ட தூரம் சென்றபிறகு, ஒரு குறிப்பிட்ட நபரிடம் எங்கள் 3 பேரையும் ஒப்படைத்துவிடுவதாகவும், பின்னாலேயே தான் வருவதாகவும் எங்களிடம் கூறினார். எதிரி ஸ்ரீதர்ராஜ் குறிப்பிடும் அந்த நபர் யார் என நாங்கள் கேட்டதற்கு, செந்தில்குமார் என்ற நபரை நாங்கள் சந்திக்க இருப்பதாக கூறினார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 18 வது எதிரிதான் செந்தில்குமார் ஆவார். அவர் எங்களிடத்தில் குரூப் 1 தேர்வு எழுதியிருப்பதாகவும், குரூப் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும் கூறினார். எங்கள் மூவரையும், எதிரி ஸ்ரீதர்ராஜ், எதிரி செந்தில்குமாரிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அங்கிருந்து எதிரி செந்தில்குமார் எங்கள் மூவரையும் ஒரு சந்து வழியாக நடந்து அழைத்துச் சென்றார். அப்போது எதிரி செந்தில்குமார் வெள்ளை நிற மேல்சட்டையும், நீல நிற ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்திருந்தார். தலையில் ஒரு தொப்பியும் போட்டிருந்தார். ஒரு குறிப்பிட்ட தூரம், சுமார் 1 ½ லிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். அங்குள்ள

கட்டிடத்தில் அலுவலகம் போன்ற அமைப்பில் ஒரு அறை இருந்தது. அங்கு ஒரு ஏர்டெல் போர்டு இருந்தது. அங்கு எங்களை அழைத்துச்சென்றபோது, அங்கு எங்களைப்போலவே 25 முதல் 30 நபர்கள் படித்துக்கொண்டிருந்தனர். நாங்கள் உள்ளே சென்றபோது, அங்கிருந்த ஒரு நபர் எங்களது பேண்ட் பாக்கெட், சட்டை பாக்கெட் சோதனை செய்துவிட்டு, எங்களிடமிருந்த செல்போன்களை வாங்கி சுவிட்ச் ஆப் செய்துவிட்டும், 2012 ம் ஆண்டு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசன் குரூப் 4 தேர்விற்கான விடையுடன் கூடிய வினாத்தாளின் நகலினை எங்கள் ஒவ்வொருவர் கையிலும் கொடுத்து, படிப்பதற்கு 2 மணி நேரம் அவகாசம் கொடுத்தனர். ஏறத்தாழ 2 முதல் 3 மணிநேரம் படித்தோம். மதியம் 12 மணிக்கு மேற்படி வினா விடைத்தாள்களை படிக்க ஆரம்பித்தோம். ஏறத்தாழ பிற்பகல் 3 மணி அளவில் படித்து முடித்துவிட்டோம். படித்து முடித்து விட்டு வெளியே செல்லும்போது ஒரு நபர், இங்கு படித்ததைப் பற்றியோ, இங்கு நடந்ததைப் பற்றியோ வெளியே யாரிடமாவது சொன்னால், அவர்களிடம் உள்ள எங்களின் அசல் கல்விச்சான்றிதழ்களை கிழித்துவிடுவதாகவும், இல்லையென்றால் அந்த கல்விச்சான்றிதழ்களைப் பயன்படுத்தி தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனுக்கு போலியாக கடிதம் எழுதி அனுப்பிவிடுவோம் என்றும் மிரட்டும்படி கூறினார். நாங்கள் உள்ளே படித்து முடிக்கும் தருவாயில் எதிரி செந்தில்குமார், எதிரி ஸ்ரீதர்ராஜிக்கு தொலைபேசி வழியாக அழைத்து அவர்கள் படித்து முடித்துவிட்டார்கள் நீங்கள் வந்து அவர்களை கூட்டிச்செல்லுங்கள் என்று கூறினார். நாங்கள் படித்துமுடித்து வெளியே வந்தபோது எதிரி ஸ்ரீதர்ராஜ் அங்கு இருந்தார். அவரிடம் எங்களை மிரட்டும்படியாக இறுதியாக பேசிய

அந்த நபர் யார் என்று கேட்டோம். அந்த நபர் எவ்வாறு இருந்தார் என்று ஸ்ரீதர்ராஜ் எங்களிடம் அடையாளம் கேட்டார். அதற்கு நாங்கள், அந்த நபர் ஒரு அதிகாரி போன்றும், சட்டையை In செய்து கொண்டும், கண்ணாடி போட்டுக்கொண்டும், தலை சற்று வழுக்கையாக இருந்ததாக அடையாளம் கூறினோம். அதனைக்கேட்ட எதிரி ஸ்ரீதர்ராஜ், அவர்தான் வெங்கடேசன் என எங்களிடம் கூறினார். அவர்தான் இந்த வழக்கின் 17 வது எதிரியாக உள்ளார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மேலும் எதிரி ஸ்ரீதர்ராஜிடம், மேற்படி வெங்கடேசனுடன், சற்று தாடி வைத்துக்கொண்டிருந்த ஒரு நபர் இருந்தார். அவர் யார் என்று கேட்டோம். அவர் எதிரி செந்தில்குமாரின் அண்ணன் தியாகராஜன் என்று கூறினார். அவரும் இந்த வழக்கில் 19 வது எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. என்னையும், எதிரி மோகன்பாபு மற்றும் எதிரி சதீஸ்குமார் மூவரையும், எதிரி ஸ்ரீதர்ராஜ் அவரது காரிலேயே அழைத்துக்கொண்டு வந்து சென்னையில் சேர்த்துவிட்டார். 06.07.2012 ம் தேதி எங்களுக்கு குரூப் 4 தேர்விற்கான தேர்வு நாளாகும். நாங்களும் தேர்விற்கு கிளம்பி சென்று தேர்வு எழுதிவிட்டோம். அதன்பின்னிட்டு எதிரி ஸ்ரீதர்ராஜ் எங்களைத் தொடர்பு கொண்டு தேர்வு எப்படி எழுதினீர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள், கேட்கப்பட்ட 200 கேள்விகளில் 90 கேள்விகள்தான் ஏற்கனவே நாங்கள் பெங்களூரில் படித்த வினாக்கள் இருந்ததாகவும், அதற்குரிய சரியான விடைகள் எழுதியதாகவும் கூறினோம். நாங்கள் பெங்களூர் சென்று படித்தபோது எங்களுக்கு 200 வினாக்களும், அதற்குரிய விடைகளும் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்படித்து தெரிந்து கொண்டோம், எங்களிடம் பெங்களூரில் கொடுக்கப்பட்ட அதே 200

வினாக்கள்தான், குரூப் 4 தேர்விலும் வினாக்களாக வந்தன. நாங்கள் மூவரும் தேர்வில் 200 வினாக்களுக்கும் விடையளித்துவிட்டோம். வினாக்களுக்கான விடை குறிப்புகள் தேர்விற்கு பின்னிட்டு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனால்வெளியிடப்பட்டது. அதை வைத்து நாங்கள் எழுதிய விடைகளை சரிபார்த்தபோது, 200 வினாக்களில் மொத்தம் 90 வினாக்களுக்கு மட்டும் நாங்கள் மூவரும் எழுதிய விடைகள் சரியாக இருந்தன. எனவே எங்களால் தேர்வில் தேர்ச்சி பெற முடியாத நிலை ஏற்பட்டதால், எதிரி ஸ்ரீதர்ராஜிடம் நாங்கள் ஏற்கனவே தேர்வின் தேர்ச்சிக்காக வேண்டி கொடுத்த முன்பணத்தொகை நானும், எதிரி மோகன்பாபுவும் கொடுத்த தலா ரூ.1,00,000/-ம் மற்றும் எதிரி சதீஸ்குமார் கொடுத்த ரூ.2,00,000/-ம் மற்றும் எங்கள் மூவரின் அசல் கல்விச்சான்றிதழ்கள் ஆகிவற்றை திருப்பி கொடுக்குமாறு எதிரி ஸ்ரீதர்ராஜிடம் கேட்டோம். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜ், பணம் கொடுத்தது, கொடுத்ததுதான். அதை திரும்பி வாங்க முடியாது. மேல் இடத்தில் பிரச்சனை ஆகும் என்று கூறினார். அதற்கு நாங்கள் பணம் திரும்பி வரவில்லை என்றால் கூட பரவாயில்லை. ஆனால் எங்களுக்குரிய அசல் கல்விச்சான்றிதழ்களை திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜ், எதிரி செந்தில்குமாரிடம் வலியுறுத்திக் கூறி மேற்படி எங்களது அசல் கல்விச் சான்றிதழ்களை பெற்றுத்தருவதாக கூறினார். அதன்பின்னிட்டு எதிரி ஸ்ரீதர்ராஜ், எதிரி செந்தில்குமாரிடம் பேசிப்பார்த்ததில் அவர் எங்களது அசல் கல்விச்சான்றிதழ்களை மறுத்துவிட்டதாக, எதிரி ஸ்ரீதர்ராஜ் எங்களிடம் கூறினார். மேலும் எதிரி ஸ்ரீதர்ராஜ், இது தான் தவறிவிட்டது, இந்த ஆண்டு நாங்கள் ஏற்னவே விண்ணபபித்திருக்கம் குரூப்2 தேர்விற்கு இதே பணத்தொகை மற்றும்

கல்விச்சான்றிதழ்களை ஏற்னவே ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எதிரி ஸ்ரீதர்ராஜ் எங்களிடத்தில் கூறினார். அதற்கு நானும், எதிரி சதீஸ்குமாரும், எதிரி ஸ்ரீதர்ராஜிடத்தில், எதிரி சதீஸ்குமார் 10ம் வகுப்பு வரைதான் படித்துள்ளதால், அவர் குரூப்2 தேர்வில் கலந்து கொள்ள இயலாது என்றும், எனவே அவருக்குரிய பணத்தொகை மற்றும் அசல் கல்விச்சான்றிதழ்களையாவது அவரிடத்தில் திருப்பிக்கொடுத்துவிடலாம் என்று கூறினோம். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜ் அவ்வாறு திருப்பி கொடுக்க முடியாது என்றும், அதற்கு வேண்டுமானால் எதிரி சதீஸ்குமார் குரூப்2 தேர்வு எழுதும் யாராது ஒரு நபரை அழைத்துக்கொண்டுவந்து இந்த செயல்பாடுகளில் சேர்த்துவிடலாம் என்றும், அந்த வகையில் எதிரி சதீஸ்குமாருக்கான பிரச்சனையை தீர்வு செய்துவிடலாம் என்றும் எதிரி ஸ்ரீதர்ராஜ் கூறினார். மேலும் குரூப் 2 தேர்விற்கு 1 வாரத்திற்கு முன்னர்தான், எதுவொன்றும் உறுதியாக கூறமுடியும் என்றும் எதிரிஸ்ரீதர்ராஜ் கூறிவிட்டார். பின்னிட்டு குரூப் 2 தேர்வு சம்பந்தமாக 11.08.2012 ம் தேதி வரை எந்தவொரு அழைப்பும் எதிரி ஸ்ரீதர்ராஜிடமிருந்து வரவில்லை. குரூப் 2 தேர்விற்கான தேதி 12.08.2012 ஆகும். 11.08.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு எதிரி மோகன்பாபு என்னை தொலைபேசி வழியாக அழைத்து, எதிரி ஸ்ரீதர்ராஜ் மேலிடத்தில் பேசி அடுத்த நாள் நடக்கப்போகும் குரூப்2 தேர்விற்கான வினாத்தாள்களை பெற்றுவிட்டார் என்றும், எனவே உடனடியாக என்னை சென்னை, அண்ணா நகர் ரவுண்டானாவிற்கு வரும்படியும் கூறினார். எனவே நானும் அன்று இரவு 11 மணி அளவில் அண்ணா நகர் ரவுண்டானாவிற்கு சென்று விட்டேன். அங்கு ஒரு மருத்துவமனை இருந்தது. அதன் அருகில் நின்று கொண்டேன். அங்கு

ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் போலீஸ் ரோந்து இருந்துகொண்டிருந்ததால், நான் எதிரி மோகன்பாபுவிடம் தொலைபேசியில் அழைத்து அந்த இடத்தில் போலீஸ் ரோந்து இருப்பதால் நான் இங்கிருந்து கிளம்பிவிடவா என்று கேட்டேன். அதற்கு எதிரி மோகன்பாபு, தனது சித்தி பையன் விக்னேசும், அவரது நண்பர் விக்கியும் அங்கு வருவதாக கூறினார். அதே போல் அவர்கள் இருவரும் சுமார் இரவு 11.40 மணிக்கு அங்கு வந்துவிட்டனர். அப்போது எதிரி மோகன்பாபுவிடம், எங்கேஇருக்கின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரி மோகன்பாபு ராயப்பேட்டையில் உள்ள தனது சித்தி வீட்டில் தான் இருப்பதாகவும், நான் நேரடியாக அங்கு வந்துவிடவும் அவர் என்னிடம் கூறினார். எனவே நானும் ராயப்பேட்டைக்கு சென்றேன். அங்கு எதிரி மோகன்பாபுவிடம், எதிரி ஸ்ரீதர்ராஜ் எங்கு என்று கேட்டேன். அதற்கு ஸ்ரீதர்ராஜ் வந்து கொண்டு இருப்பதாகவு மோகன்பாபு கூறினார். நானும் ஸ்ரீதர்ராஜிடம் போனில் தொடர்பு கொண்டு கேட்டேன். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜும் வந்து கொண்டிருப்பதாக கூறினார். சற்று நேரத்தில் அவர் வந்துவிட்டார். அவருடன் அவரது நண்பர் ஞானசேகரனும் உடன் வந்தார். அங்கிருந்து என்னையும், எதிரி மோகன்பாபு மற்றும் சதீஸ்குமாரையும் அழைத்துக்கொண்டு, எதிரி ஸ்ரீதர்ராஜ், எதிரி ஞானசேகரனின் மாமா வீட்டிற்கு அழைத்துச் சென்றார். எதிரி ஸ்ரீதர்ராஜ் தன்னுடன் அழைத்து வந்த எதிரி ஞானசேகரன் இந்த வழக்கின் 21 வது எதிரி ஆவார். அவர் இன்று ஆஜராகியுள்ளார். எதிரி ஞானசேகரனின் மாமா வீட்டிற்கு வெளியே என்னையும், எதிரி மோகன்பாபு மற்றும் சதீஸ்குமாரையும் நிறுத்திவைத்து விட்டு, எதிரி ஞானசேகரன் மற்றும் எதிரி ஸ்ரீதார்ராஜ் வீட்டிற்குள்ளே சென்று விட்டனர். அப்போது விடியற்காலை மணி 4 இருக்கும்.

பின்னிட்டு 10 – 15 நிமிடங்களில் அவர்கள் இருவரும் வீட்டிலிருந்து வெளியே வந்தனர். எதிரி ஞானசேகர், எதிரி ஸ்ரீதர்ராஜிடம், எதிரி சதீஸ்குமாரின் இ-மெயில் முகவரியை வாங்கித்தருமாறு கூறினார். நானும், எதிரி சதீஸ்குமாரிடம் பேசி அவரது இ-மெயில் முகவரியை வாங்கி, எதிரி ஸ்ரீதர்ராஜிடம் கொடுத்தேன். மீண்டும் எதிரி ஞானசேகரனும், எதிரி ஸ்ரீதர்ராஜும் வீட்டிற்குள் சென்று விட்டு ½ மணி நேரம் கழித்து வந்தார்கள். நான் இ-மெயில் முகவரியை அவர்கள் கேட்கும்போது எதற்காக என்று கேட்டேன். அதற்கு எதிரி ஸ்ரீதர்ராஜ், தற்போது தங்களிடம், அன்று காலை நடக்கவிருக்கும் குரூப்2 தேர்விற்கான பொதுஅறிவு மற்றும் தமிழுக்கான வினாத்தாள் மட்டுமே உள்ளது என்றும், ஈரோட்டில் உள்ள வரதராஜன் என்ற நபரிடம் பொதுஅறிவு மற்றும் ஆங்கிலத்திற்கான வினாத்தாள் உள்ளது என்றும், தங்களுடன் உள்ள எதிரி மோகன்பாபு பொதுஅறிவு மற்றும் ஆங்கில வழி தேர்விற்காக விண்ணப்பித்துள்ளதால், நம்மிடம் உள்ள பொது அறிவு மற்றும் தமிழ் வினாத்தாளை அவர்களுக்கு அனுப்பி வைத்தும், அவர்களிடம் உள்ள பொதுஅறிவு மற்றும் ஆங்கிலத்திற்கான வினாத்தாளை பெற்று, வினாத்தாள்களை பரிமாற்றம் செய்து கொள்ளவேண்டும் என்றும் கூறினார். பின்னிட்டு எதிரி ஸ்ரீதர்ராஜ் மற்றும் ஞானசேகரிடமிருந்து எனக்குரிய பொது அறிவு மற்றும் தமிழுக்கான வினாத்தாளை பெற்றுக்கொண்டு, எக்மோரில் உள்ள இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு படிக்க சென்று விட்டேன். மேலும் எதிரி சதீஸ்குமார் குரூப் 2 தேர்வில் கலந்து கொள்ள முடியாதவர் என்பதாலும், எதிரி மோகன்பாபுவிற்குரிய வினாத்தாள், பொது அறிவு மற்றும் ஆங்கில வினாத்தாள் என்பதால் அவர்களை அங்கே விட்டு விட்டு நான் மட்டும்தான்

அங்கிருந்து கிளம்பினேன். அன்றைய தினம் காலை 7.10 மணியளவில் எதிரி ஸ்ரீதர்ராஜ் எனக்கு செல்போன் வழியாக அழைத்து, அந்த வினாத்தாள்களை படித்து விட்டால், அதைத் தன்னிடம் கொடுக்குமாறு கூறினார். எதிரி ஞானசேகரன் மற்றும் ஸ்ரீதர்ராஜிடமிருந்து நான் பெற்ற பொது அறிவு மற்றும் தமிழுக்கான வினாத்தாளில் 200 வினாக்களும், அவற்றில் 185 வினாக்களுக்குரிய விடைகள் குறிக்கப்பட்டும் இருந்தது. எதிரி ஸ்ரீதர்ராஜ் கேட்டபோது நான் இன்னும் படித்து முடிக்கவில்லை என்றும், இன்னும் 10 நிமிடம் கால அவகாசம் கொடுக்குமாறும் கேட்டேன். அதன் பின்னிட்டு அரை மணிநேரத்திற்குள் எதிரி ஸ்ரீதர்ராஜ் நானிருக்கும் இடத்திற்கே அவரது இருசக்கர வாகனத்தில் வந்து, என்னிடம் அவர் கொடுத்திருந்த விடையுடன் கூடிய வினாத்தாளை பெற்றுக்கொண்டார். அதன்பின்னிட்டு நான் எனது வீட்டிற்கு சென்று என்னை தயார்படுத்திக்கொண்டு தேர்விற்கு சென்று விட்டேன். எனக்கு தேர்வு அறையானது எக்மோர் லைப்பரரிக்கு அருகே உள்ள ஒரு கிறித்துவ பள்ளியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்து. தேர்வு எழுதி முடித்துவிட்டு, மதியம் 1.30 மணி அளவில் எனது வீட்டிற்கு நான் சென்றபோது சன் டி.வி செய்தியில் அன்றைய குரூப் 2 தேர்விற்கான வினாத்தாள் தேர்விற்கு முன்பாகவே வெளியாகிவிட்டது என்ற செய்தியினை பார்த்தேன். அதைப்பார்த்தவுடன் எதிரி ஸ்ரீதர்ராஜை தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டு இது குறித்து கேட்டேன். அதற்கு அவர் நம்ம சைடில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அது ஈரோட்டில் தான் பிரச்சனை என்றும், அதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்றும் கூறிவிட்டார். அடுத்தநாள் காலையில் எதிரி ஸ்ரீதர்ராஜ் என்னை தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டு, ஆலந்தூர் வரும்படியும், இந்த

பிரச்சனை குறித்து பேச வேண்டும் என்றும், ஏற்கனவே மோகன்பாபு மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் வந்துவிட்டனர் என்றும் கூறினார். எனவே நானும் ஆலந்தூர் கிளம்பி சென்றேன். அங்கு ஸ்ரீதர்ராஜ், 12.08.2012 ம் தேதி விடியற்காலையில் நான் இங்கிருந்து ஈரோடு வரதராஜுக்கு இ-மெயிலில் அனுப்பி வைத்த பொதுஅறிவு மற்றும் தமிழ் வினாத்தாள் தான் பிரச்சனையாகி விட்டதாக கூறினார். அதைக்கேட்டுக்கொண்டு, பிரச்சனை வந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டு நாங்கள் அனைவரும் அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அதன்பின்னிட்டு 2 நாட்கள் எதிரி ஸ்ரீதர்ராஜை செல்போன் வழியாக தொடர்பு கொண்டபோது அவர்எங்களது அழைப்பை ஏற்கவில்லை. எனவே நாங்கள் எதிரி ஸ்ரீதர்ராஜின் அண்ணன் கணேஷ் என்பவரை தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டபோது இது சம்பந்தமாகவும், எதிரி ஸ்ரீதர்ராஜ் சம்பந்தமாகவும் தொலைபேசியில் எதுவும் பேசவேண்டாம் என்று கூறிவிட்டார். பின்னிட்டு எதிரி ஸ்ரீதர்ராஜின் அண்ணன் செல்போன் வழியாக என்னை அழைத்து, எதிரி மோகன்பாபு போலீசில் மாட்டிக்கொண்டதாகவும், அவர்களுடைய வீட்டையும் போலீசிற்கு காட்டிக்கொடுத்துவிட்டார் என்றும், எனவே அங்கிருந்து கிளம்பிவிடும்படி கூறிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார். பின்னிட்டு நான் எதிரி மோகன்பாபுவிற்கு செல்போன் வழியாக அழைத்து எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டும், நீ போலீஸ் காவலில் இருப்பதால் நானே அங்கு வந்து பேசுகிறேன் என்றும் கூறினேன். அதற்கு மோகன்பாபு பதில் ஏதும் கூறாமல் இணைப்பை துண்டித்துவிட்டார். அன்று, அதாவது 18.08.2012 ம் தேதி இரவு 9.30 மணியளவில் போலீசார் எங்கள் இல்லத்திற்கே வந்து என்னை வந்து அழைத்துச்

சென்றுவிட்டனர். அதன் பின்னிட்டு 21.08.2012 ம் தேதி ஈரோடு டவுன் போலீஸ் ஸ்டேசனில் வைத்து என்னிடம் வாக்குமூலம் பெற்று, அதில் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். மேலும் என்னிடமிருந்த, செல்போன், சிம்கார்டு, பணம் ரூ.3,500/- ஆகியவற்றை பெற்றுக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். அதன்பின்னிட்டு 22.08.2012 ம் தேதி என்னை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர். தற்போது சாட்சி போலீசாரிடம் பணம் ரூ3,800/- கொடுத்ததாகவும், அதில் ஏழு 500 ரூபாய் நோட்டுக்களும், மூன்று 100 ரூபாய் நோட்டுக்கள் இருந்ததாகவும் சாட்சியம் அளிக்கிறார். மேலும், இதற்கு முன்பாக, அதாவது 14.08.2012 ம் தேதி எதிரி செந்தில்குமாரின் அண்ணன் எதிரி தியாகராஜனுக்கு செல்போன் வழியாக நான் அழைத்து எனது அசல் கல்விச் சான்றிதழ்களை கொடுக்குமாறு கேட்டேன். அவரும் வந்து வாங்கிக்கொள்ள கூறியதால், 14.08.2012 ம் தேதியே ஆலந்தூருக்கு சென்று நானும் வாங்கிக்கொண்டேன். 22.08.2012 ம் தேதி நீதிமன்றக் காவலுக்கு சென்ற நான், 22.10.2012 ம் தேதி பிணையில் வெளியில் வந்து விட்டேன். 20.09.2013 ம் தேதி இந்த வழக்கு சம்பந்தமாக நான் Approver ஆக மாறிக்கொள்வதாக இவ்வழக்கு சம்பந்தப்பட்ட காவல் துறையினரிடம் கூறினேன். எனவே அது சம்பந்தமாக நான் ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஆஜரானேன். அவர்களிடம் நான் இவ்வழக்கில் Approver ஆக மாறுவதாக கூறினேன். அதன்பின்னிட்டு அவர் என்னிடம் 10, 15 கேள்விகள் கேட்டனர். அதற்கு நான் கொடுத்த பதிலையும் பதிவு செய்து கொண்டு என்னிடம் கையொப்பங்கள் பெற்றுக் கொண்டனர். பின்னிட்டு எனக்கு 1 நாள் கால அவகாசம் கொடுத்து, இது குறித்து யோசித்துவிட்டு மீண்டும் மறுநாள்

நீதிமன்றத்திற்கு வர அறிவுறுத்தினார். நானும், யோசித்துவிட்டு 23.09.2013 ம் தேதி ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கையில் உள்ள 20.09.2013 ம் தேதி ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் என்னிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் அதற்குரிய விடைகளுக்கான பதிவுகள் அடங்கிய கோப்பு நீதிமன்ற சான்றாணவம் 1 ஆகும். அதன்பின்னிட்டு 23.09.2013 ம் தேதி ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நான் கொடுத்த வாக்குமூலத்தின் கோப்பு நீதிமன்ற சான்றாவணம் 2 ஆகும். (மேற்படி நீதிமன்ற சான்றாவணம் 1 மற்றும் 2 யை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில், கு.வி.மு.ச 306 பிரிவின் கீழான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணையுடன் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.) மேற்படி நீதிமன்ற சான்றாவணங்கள் 1 மற்றும் 2 ன்படியான நடவடிக்கையின்போது நீதிமன்றத்தலிருந்து நீதிபதி மற்றும் நீதிமன்ற அலுவலர்கள் தவிர மற்ற அனைவரும் வெளியேற்றப்பட்டு, மூடிய நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். பின்னிட்டு 14.05.2014 ம் தேதி ஈரோடு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டு நான் விசாரிக்கப்பட்டேன். நீதிபதி என்னிடம் கேட்ட கேள்விகளுக்கு நான் பதிலளித்தேன். எனக்கு காலஅவகாசம் வழங்கப்பட்டது. 14.05.2014 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தபோது நான் நடந்த விசயத்தை கூறுவதாக கூறியிருந்தேன். மறுநாளும் நீதிமன்றத்தில் நான் ஆஜராகி நடந்த விபரத்தை கூறினேன். அப்போது கேள்வித்தாள் திருவள்ளூரைச் சேர்ந்த 19 வது எதிரி தியாகராஜனின்

தம்பி 18 வது எதிரியான செந்தில்குமாரின் நண்பர்தான் ஆந்திராவைச் சேர்ந்த 4 வது எதிரி ஆனந்தராவ், அந்த ஆனந்தராவின் நண்பர் 3 வது எதிரி கஹன் என்றும், 3 மற்றும் 4 வது எதிரிகளின் நண்பர் கல்கத்தாவைச் சேர்ந்த ஹைடெக் பிரிண்டிங் பிரஸ்சில் வேலை செய்யும் பணியாளர் 2 ம் எதிரி கேத்ராமோகன் மந்தன் என்றும், 2 ம் எதிரியின் Employer தான் 1 ம் எதிரி ரிஷிகேஷ்குண்டு தான் என்றும், அவரிடம் பணம் கொடுத்துதான், அவரிடம் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிசனால் அச்சு செய்ய கொடுக்கப்பட்ட வினாத்தாள்களை பெற்றதாகவும் எனக்கு தெரிந்த சங்கதிகளை ஈரோடு, தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். நான் Approver ஆக வேண்டும் என்பதால் மேற்படி சங்கதிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். ஈரோடு, தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில், 14.05.2014 ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமாக என்னிடத்தில் செய்யப்பட்ட விசாரணைக்கான பதிவு நீதிமன்ற சான்றாவணம்.3 ஆகும். அதே நீதிமன்றத்தில் 15.05.2014 ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமாக என்னிடத்தில் செய்யப்பட்ட விசாரணைக்கான பதிவு நீதிமன்ற சான்றாவணம்.4 ஆகும். (மேற்படி நீதிமன்ற சான்றாவணம் 3 மற்றும் 4 யை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில், கு.வி.மு.ச 307 பிரிவின் கீழ் Approver யிடம் 2 வது வாக்குமூலம் பெறுவதற்கான தடைகள் இருப்பதால், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணையுடன் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.) என்னை கைது செய்தபோது என்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3800/-, நோக்கியோ கருப்பு கலர் மாடல் 2690, வோடோபோன் சிம்கார்டு மற்றும் 1 பேட்டரியுடன் கூடிய பேனல் பின்னால் கவரில்லாத செல்போன் ஆகியவை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, தற்போது என்னிடம் காட்டப்படுபவைதான்.

மேற்கண்ட பணம் சா.பொ.1 மற்றும் செல்போன் சா.பொ.2 ஆகும். (மேற்படி சா.பொ.1 மற்றும் 2யை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில், அவை Approver ஜெய்நிவாசனுக்குரியவை என்பதால் அவை வழக்கு சொத்துக்கள் அல்ல என்றும், அவற்றை வழக்கில் குறியீடு செய்யத்தேவையில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணையுடன் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டன.)

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் சாட்சியின் முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது. முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறொரு தேதிக்க ஒத்திவைக்கப்படுகிறது.